# DEPOSITION OF WITNESS
**(CHAPTER XXIII Code of Criminal Procedure)**

## IN THE COURT OF SPECIAL JUDGE FOR THE CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT 1988, CHENNAI-104

| | |
|---|---|
| **Calender case** | **--- CC.No.3/2018** |
| **Deposition of Witness for** | **--- Defence DW1** |
| **Name** | **: Tmt.Amudha** |
| **Father/Husband's Name** | **: Tr.** |
| **Address** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of July 2026.**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் எதிரி. நான் Commissioner Pay and Account Office ல் Telephone Operator ஆக பணிபுரிந்தேன். என்னுடைய பணி எங்கள் அலுவலகத்திற்கு வெளியில் இருந்து வரும் தொலைபேசி அழைப்புகளை பெற்று எந்த பிரிவிற்கு அழைப்பு வந்ததோ அந்த பிரிவிற்கு இணைப்பு கொடுப்பேன். எங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் வெளி மாவட்டத்தில் உள்ள அலுவலகத்திற்கு தொலைபேசியில் பேச கோரும் போது அதற்கு தொலைபேசி இணைப்பை ஏற்படுத்தி கொடுப்பேன். எங்கள் அலுவலகத்திற்கு காலையில் பணிக்கு சென்றால் பணி முடியும் வரை

என்னுடைய இருக்கையில் தான் அமர்ந்திருக்க வேண்டும். உணவு அருந்தக்கூட வெளியில் செல்ல கூடாது, என்னுடைய இருக்கையில் தான் உட்கார்ந்து உணவு அருந்த வேண்டும். Telephone Operator பணி தவிர வேறு எந்த பணியும் எனக்கு வழங்கபடவில்லை. Telephone Operator என்பதால் யாருக்கும் எந்த உதவியும் என்னால் செய்ய முடியாது. என்னுடைய அலுவலகம் முழுவதும் CCTV பொருத்தப்பட்டுள்ளதால் அலுவலக நேரத்தில் இருக்கையில் இருந்து வெளியே செல்ல முடியாது. நான் சோதனை காலத்தில் என்னுடைய 162.200 கிராம் எடை கொண்ட நகைகளை ரூ.2,50,000/– த்திற்கும், 155.00 கிராம் எடை கொண்ட நகைகளை ரூ.2,45,000/–த்திற்கும் 22.01.2010 தேதியில் Abhish & Co No.3, East Kalmandapam Road, Royapuram, Chennai–13 என்ற நகை கடையில் அடகு வைத்துள்ளேன். அதற்கான அடமான இரசீதுகள் எண்ணிக்கை–2 **எ.த.சா.ஆ.1 வரிசை** ஆகும். நான் மேற்படி சோதனை காலத்தில் சென்னை கிருகம்பாக்கம், சக்கரபாணி நகரில் Block B ல் சுமார் 1500 சதுர அடி கொண்ட வீட்டை என்னுடைய பெயரில் Preethaa Home Developers Private Limited என்ற நிறுவனத்திடமிருந்து கிரயம் பெற்றேன். அதற்கு நான் சுமார் 6 தவணைகளில் ரூ.19,18,800/– செலுத்தியிருக்கிறேன். மேற்படி வீடு முழுமையடைந்து 15.10.2010 தேதியில் மேற்படி நிறுவனம் என்னிடம் ஒப்படைத்தது. அதற்கான Completion Certificate, Receipt மற்றும் கட்டிடத்திற்கான மொத்த தொகை செலுத்தியதற்கான இரசீது ஆகியவை **எ.த.சா.ஆ.2** (4 தாள்கள்) ஆகும். மேற்படி வீட்டை என்னுடைய அம்மா சொன்னதின் பேரில் விற்பனை

செய்துவிட்டேன். என்னுடைய வீட்டில் நான் 5 வது மகள். மேற்படி வீட்டை என்னுடைய அம்மா எனக்கு உதவி செய்ததின் பேரில் கிரயம் பெற்று பின்னர் என்னுடைய அம்மா கேட்டுக்கொண்டதின் பேரில் விற்பனை செய்து விட்டேன். எனக்கு மேல் 3 அண்ணன்கள், 1 அக்கா இருக்கிறார்கள். மேலும் எனக்கு 2 தங்கைகள், 1 தம்பி இருக்கிறார். எனக்கு திருமணமாகி பிறகு விவாகரத்து பெற்று என் மகளுடன் நான் தனியாக இருந்ததால் என்னுடைய அம்மா என் பெயரில் மேற்படி சொத்துகளை வாங்கினார். பிறகு அவருடைய தேவைகேற்ப அவர் கேட்ட போது நான் மேற்படி சொத்துகளை விற்பனை செய்து விட்டேன். எனக்கும் என்னுடைய கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு நான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்ததால் என் மீது உள்ள ஆத்திரத்தினால் பொய்யான புகாரை என் மீது கொடுத்து இந்த வழக்கை போட்டுள்ளார். நான் மேற்படி சோதனை காலத்தில் 14.02.2010 அன்று திருமதி.ஜெயந்தி, க/பெ. A.P. ஜெயபிரகாஷ், எண்.AP-617, New No.40, 51st Street, 9th Sector, K.K.Nagar, Chennai-78 என்ற நபரிடம் ரூ.10,00,000/- கடன் பெற்றேன். மேற்படி கடன் தொகைக்காக அதே தேதியில் நான் மேற்படி திருமதி.ஜெயந்தி என்பருக்கு 2 கடன் பத்திரங்கள் தலா ரூ.5,00,000/-த்திற்கு எழுதி கொடுத்திருக்கிறேன். மேற்படி கடன் பத்திரங்கள் எண்ணிக்கை-2 **எ.த.சா.ஆ.3** ஆகும். நான் என் பெயரில் 13.06.2002 தேதியில் நெடுங்குன்றம் கிராமம், சதானந்தபுரத்தில் 2725.5 சதுர அடி கொண்ட வீட்டு மனை கிரயம் பெற்று, பிறகு 09.06.2010 தேதியில் திரு.கதிரவன் என்பவருக்கு விற்பனை செய்வதற்காக பொது அதிகார

பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன். மேற்படி பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **எ.த.சா.ஆ.4** ஆகும். மேற்படி சொத்தை விற்றதற்கு கிரய தொகையை ரூ.28,00,000/- என்னுடைய தாயார் பெற்றுக்கொண்டார். என் தாயார் கேட்டுக்கொண்டதின் பேரில் பொது அதிகார பத்திரத்தை நான் எழுதிக்கொடுத்தேன். என்னிடம் பொது அதிகாரம் பெற்ற நபர் எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு இறுதி வாய்ப்பு அறிவிப்பு வழங்கப்பட்டதற்கு நான் மேற்படி ஆவணங்களை இணைத்து என்னுடைய வருமானத்திற்கு அதிகமாக எந்த சொத்தும் நான் சேர்க்கவில்லை என்று விரிவான பதிலை 12.05.2016 புலன் விசாரணை அதிகாரிக்கு கொடுத்திருக்கிறேன். மேற்படி என்னுடைய பதில் அறிக்கை அரசு தரப்பில் அ.த.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னுடைய கணவர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பணிபுரிந்து வந்தார். என்னுடைய கணவர் அரசியல் கட்சியை சார்ந்தவர் என்பதால் மேற்படி அதிகாரத்தை பயன்படுத்தி என்மீது இந்த பொய்யான வழக்கை ஜோடித்துள்ளார். நான் Telephone Operator ஆக 37 வருடங்களாக அரசு பணியில் இருந்துள்ளேன். நான் பணி புரிந்த காலத்தில் என் மீது எந்த குறையோ, ஒழுங்கு நடவடிக்கையோ இல்லை. இந்த வழக்கு மட்டும் தான் எனக்கு எதிராக போடப்பட்ட ஒரே வழக்காகும். என்னுடைய அலுவலகத்தில் எந்த உத்தரவு போடும் அதிகாரமும் எனக்கு இல்லை, மேலும் யாருக்கும் உதவி செய்து பணம் பெறும் பணி எனக்கு இல்லை. நான் எந்த குற்றமும் செய்யவில்லை என்பதால் இந்த

வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**//True Copy//**

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of accused and admitted by him/her to be correct.

V JAGANNATHAN

Digitally signed by V JAGANNATHAN
Date: 2026.07.06 15:09:52 +0530

Special Judge
under P.C.Act